Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 113

திங்கட்கிழமை
18 மார்ச் 2024

பங்குனி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"திட்டம் போட்டு மோசடி செய்தாலும் தொடர்ந்து ஏமாறும் மோட்டுக்கூட்டமும் இருக்கத்தான் செய்யுது பாருங்கோ"

## வடக்கில் கடந்தாண்டு மாத்திரம்

# வெளிநாடு அனுப்புவதாக 254 கோடி ரூபா மோசடி

## வவுனியாவிலேயே அதிக முறைப்பாடுகள்

**யாழ்ப்பாணம், மார்ச் 18**

**வடக்கு மாகாணத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு மாத்திரம் வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து மோசடி செய்யப்பட்ட சம்பவங்களில் 139 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. முறைப்பாடுகளின் அடிப்படையில் 254 கோடி ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.**

11

## யாழ். பல்கலை. தொடர்பிலும் விசாரணை நடத்தப் பணிப்பு

இன நல்லிணக்கத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்யுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் கல்வி அமைச்சால் கோரப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபரும் சொற்பொழிவாளருமான ச.லலீசன், இளைஞர்களிடையே இன நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையில் தமிழ் இளைஞர்களை எழுச்சி கொள்ளத் தூண்டும் வகையில் கருத்துகளைத் தெரிவித்திருந்தார் என்று கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் கல்வி அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றிருந்தது. இதனடிப்படையில், இன நல்லிணக்கத்துக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான நிகழ்வை எவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தலாம் என்பது தொடர்பிலும் விசாரணை முன்னெடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)



## வெதுப்பக உற்பத்தி தொடர்ந்தும் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 18

பாண் மற்றும் கேக் என்பனவற்றின் விற்பனை 40 சத வீதத்தாலும், ஏனைய வெதுப்பக உற்பத்திகள் 25 சத வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

வட்டு. இளைஞன் கொலை;

## மற்றொரு சந்தேகநபரும் கைது

*யாழ்ப்பாணம், மார்ச் 18*

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைஞனை கடந்த திங்கட் கிழமை கடத்திப் படுகொலை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய மேலும் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் வைத்து யாழ். மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவால் கைதுசெய்யப்பட்டார். சித்தங்கேணியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலை தொடர்பில் இதுவரை 6 பேர் சந்தேகத்தில் கைதாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-66)

## சுகாதாரத் தொழிற்சங்கங்கள் நாளை மீண்டும் புறக்கணிப்பு

கொழும்பு, மார்ச் 18

நாளை முதல் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக சுகாதாரத் தொழிற்சங்க சம்மேளனத்தின் இணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.


மருத்துவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை, தமக்கும் வழங்குமாறு கோரி, தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னரும் மேற்படி கோரிக்கையை முன்வைத்து தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுகளைத் தொடர்ந்து தற்காலிகமாக அது

11

## கட்டுமரம் - படகு விபத்து:

## சடலம் கரையொதுங்கியது!



பக்.11

கிளிநொச்சி, முல்லைத்தீவில்

# போதைப்பொருள் விற்ற 55 பேர் இதுவரை கைது

## பொலிஸ்மா அதிபர் தகவல்

கிளிநொச்சி, மார்ச் 18

புலனாய்வாளர்கள் ஊடாக திரட்டப்பட்ட தகவலுக்கு அமைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் 25பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 பேருமாக 55 பேர் உயிர்கொல்லி போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

கிளிநொச்சியிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பொது அமைப்புகளுடனான கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உயிர்கொல்லி போதைப்பொருள் விற்பனையுடன் தொடர்புடையவர்களின் விவரங்கள் புலனாய்வாளர்கள் ஊடாகத் திரட்டப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் 28 பேரை அவ்வாறு அடையாளம் கண்டிருந்த நிலையில் 25 பேரை இதுவரை கைது செய்துள்ளோம். அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 35 பேரை அடையாளம் கண்டிருந்த நிலையில் 30 பேரைக் கைது செய்துள்ளோம். எஞ்சியோரையும் விரைவில் கைது செய்வோம் - என்றார். (அ-ஒ-5)

## ரயில் மோதி ஒருவர் சாவு!

வவுனியா, மார்ச் 18

வவுனியா, தேக்கவத்தையில் ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தவிபத்துநேற்றுமாலை இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரம்

11

# கைதான தமிழக மீனவர்கள் 21 பேருக்கும் விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், மார்ச் 18

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 21 தமிழக மீனவர்களும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரு விசைப் படகில் வந்த 21 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனாக மாறுவதற்கு இலங்கை தயாரில்லை



## இந்தியாவிடம் தெரிவித்துள்ளோம் என தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 18**

**இந்தியா, சீனா மற்றும் அமெரிக்காவுக்கிடையிலான பூகோள அரசியல் போட்டிக்கு மத்தியில் மற்றுமொர் உக்ரைனாக மாறுவதற்கு இலங்கை தயாரில்லை என்ற விடயத்தை இந்தியாவிடம் நாம் தெரிவித்துள்ளோம் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் கடைப்பிடிக்கப்படும் வெளிவிவகார க் கொள்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இராஜதந்திரத் தொடர்பு என்பது 'மஜிக்' கிடையாது. அது எமக்கு நன்கு தெரியும். வடகொரியா, கியூபா மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் மட்டும் தான் எமது தொடர்பு இருக்கும் என சிலர் கூறுகின்றனர்.

உலகம் இன்று மாறியுள்ளது. உலக பூகோள அரசியலும் மாறியுள்ளது. நாம் இந்தியா, சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உட்பட உலகில் உள்ள அனைத்து நாடுகளுடனும் கொடுக்கல் - வாங்கல்களிலும் ஈடுபடுவோம். அதற்கான உறவு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அமெரிக்கா, இந்தியா, சீனா என்பன உலக அதிகார அரசியலில் ஈடுபடுகின்றன. அந்தப் போட்டியில் எமது நாடு சிக்கக்கூடாது. நாம் மற்றுமோர் உக்ரைனாக மாறுவதற்குத் தயாரில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்தோம். பிராந்திய பாதுகாப்பு சார்ந்த விடயத்தின்போது சரியான இடத்தில் நாம் நிற்போம். அவர் அதனை ஏற்றுக்கொண்டார்- என்றார். (ஒ-44)

# பொதுத் தேர்தல் பரப்புரை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 18

நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து பரப்புரை வேலைத்திட்டத்தை பொதுஜன பெரமுன அடுத்தவாரம் ஆரம்பிக்கவுள்ளது எனவும், அதற்கான செயற்பாட்டு மையங்கள் திறக்கப்படவுள்ளன எனவும் ராஜபக்ச குடும்பத்தின் பேச்சாளராகக் கருதப்படும் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

'ஜனாதிபதித் தேர்தல் அல்ல, முதலில் பொதுத்தேர்தலே நடத்தப்படும். அத்தேர்தலுக்கான நடவடிக்கையை பசில் ராஜபக்ச ஆரம்பித்துவிட்டார். அடுத்தவாரம் முதல் செயற்பாட்டு மையங்கள் திறக்கப்பட்டு நடவடிக்கை இடம்பெறும். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்பதையும் உறுதியாகக் கூறிக் கொள்கின்றேன்' எனவும் உதயங்க வீரதுங்க குறிப்பிட்டுள்ளார். (ஒ-44)

# விஞ்ஞான ஆய்வுடனேயே கடலட்டைப்பண்ணைகள்

## கூறுகிறார் கடற்றொழில் அமைச்சர்

யாழ்ப்பாணம், மார்ச் 18

எமது மாவட்டங்களில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி அந்தந்தப் பிரதேச மக்களின் வாழ்வியலைக் கட்டியெழுப்பும் நோக்கோடு, விஞ்ஞான ஆய்வுகள் மூலம் சூழலியல் பாதுகாப்பை உறுதிசெய்து மேற்கொள்ளப்படும் கடலட்டைப் பண்ணைகளை எழுந்தமானமாக விமர்சிப்பதன் மூலம் எமது மக்களுக்கு துரோகம் இழைக்கின்றனர் - இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

போக்கற்றவர்கள் நரம்பற்ற நாக்குகளால் கடலட்டைப் பண்ணைகளை பற்றித் தவறாகப் பேசுகின்றனர்.

வடக்கில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகளில் பல்தேசியக் கம்பனிகளோ சீனப் பிரஜைகளோ சம்பந்தப்பட்டிருப்பதை நிரூபிக்குமாறு சவால் விடுகிறேன்- என்றார். (ஒ-27)

# பௌத்தத்தைக் கட்டியெழுப்ப பரப்புரைகள் முன்னெடுப்பு

## ஓமல்பே சோபித தேரர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 18

அரகலயவால் சிங்கள - பௌத்த தன்மை இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. எனவே, பௌத்தத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற பரப்புரை முன்னெடுக்கப்படலாம். புத்தகங்கள் வெளியாவது இதன் நோக்கமாக இருக்கலாம் என்று கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அன்று இறுதிக் கட்டத்தில் கோத்தாபய ராஜபக்ச நாட்டில் இருந்து செல்வதற்குத் தயாரானவேளை அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்ற தகவல் வந்தது. இதனையடுத்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளியேறும் பிரிவு ஊடாக அதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுப்பதற்கு நான் முன்னிலையானேன். நடந்த தவறை மூடிமறைப்பதற்காக இவ்வாறு புத்தகங்களை எழுதி, மக்கள் மத்தியில் அனுதாபம் பெறுவதற்கு எடுக்கப்படும் முயற்சி ஏற்புடைய நடவடிக்கை அல்ல - என்றார். (ஒ-44)



# மகளுக்குச் 'சல்யூட்'

சென்னை, மார்ச் 18

டி.எஸ்.பி. ஆக பொறுப்பேற்ற மகளுக்கு இன்ஸ்பெக்டராகவுள்ள தந்தை சல்யூட் அடித்து வரவேற்ற நெகிழ்ச்சியான சம்பவம் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆந்திர மாநிலம் திருப்பதியில் இன்ஸ்பெக்டராக உள்ளார் ஷ்யாம் சுந்தர். அவருடைய மகள் பிரசாந்தி குண்டூரில் டி.எஸ்.பியாக பணி நியமனம் பெற்றுச் சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த நெகிழ்ச்சியான சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-100)

# கடலோர பாதுகாப்புக்கு செயலி

கொழும்பு, மார்ச் 18

கடற்கரைகளில் கழிவு முகாமைத்துவத்தைப் பேணுவதற்கு புதிய கைபேசி செயலி ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமைீட்டுடன் இந்தக் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

கரையோரத் தூய்மைத் திட்டங்கள், கரையோரத் தூய்மையைப் பேணுதல் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு இது பங்களிப்பாக அமையும் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (ச-இ)

# தாதியர்கள் வெளியேற்றம் தள்ளாடும் சுகாதாரத்துறை

கொழும்பு, மார்ச் 18

கடந்த 2 வருடங்களில் இலங்கையில் இருந்து 2 ஆயிரத்து 528 தாதியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்று அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. 400 க்கும் மேற்பட்ட இலங்கை தாதியர்கள் சிங்கப்பூரில் பணிபுரிவதாக சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. அதேவேளை 100 தாதியர்களைக் கொண்ட குழுவொன்று நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை சிங்கப்பூரில் உள்ள சாங்கி விமான நிலையத்தை சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வெளியேற்றம் காரணமாக சுகாதாரத்துறையில் கடுமையான நெருக்கடி உருவாகும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மஹிந்தவின் குடும்பத்தை ரணிலே வாழவைத்தார்

## ரஞ்சித் மத்தும பண்டார குற்றச்சாட்டு

வவுனியா, மார்ச் 18

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ச குடும்பத்தையே வாழ வைத்துள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.



வவுனியாவுக்கு அண்மையில் பயணம் மேற்கொண்ட அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது,

இன்னும் ஒரு சில மாதங்களில் தேர்தல்கள் வர இருக்கின்றன. மொட்டுச் சின்னமோ அல்லது ரணிலோ வந்தால் தற்போதைய நிலைதான் நீடிக்கும். ஐக்கிய மக்கள் சக்தியைப் பலப்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் மக்கள் வீதிக்கு இறங்கி மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ஆகியோரை வீட்டுக்கு அனுப்பினர். ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ச குடும்பத்தையே வாழ வைத்துள்ளார்- என்றார். (ஒ-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பைப் பலப்படுத்த சீனக்குழு இலங்கைக்கு!

**கொழும்பு, மார்ச் 18**

**தெற்காசிய நாடுகளுடனான பாதுகாப்பு விவகாரங்களில் மேலும் ஒத்துழைப்புகளை விரிவுபடுத்திவரும் சீனா, தனது உயர்மட்ட இராணுவப் பிரதிநிதிகள் குழுவை இலங்கை, மாலைதீவு மற்றும் நேபாளத்துக்கு அனுப்பியுள்ளது.**

இந்தப் பயணமானது தெற்காசியாவில் சீன மூலோபாயப் போட்டியாளரை எதிர்கொள்வதற்கான உந்துதலின் முக்கியமான நகர்வாகக் கருதப்படுகிறது.

சீனாவுடன் 'இராணுவ உதவி' ஒப்பந்தத்தில் மாலைதீவு கடந்த வாரத்தில் கைச்சாத்திட்டிருந்தது. மறுபுறம் மாலைதீவில் மூலோபாய தீவுக்கூட்டத்தில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தினரை நாட்டைவிட்டு வெளியேறும்படி மாலைதீவு உத்தரவிட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில், சீனாவின் இராணுவக் குழு இலங்கை, மாலைதீவு மற்றும் நேபாளத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை மிகுந்த பரபரப்பான விடயமாக மாறியுள்ளது.

இந்தியப் பெருங்கடலில், இலங்கையில் சீனாவின் வளர்ந்துவரும் இருப்பு மற்றும் மாலைதீவில் அதன் செல்வாக்கு ஆகியவற்றில் இந்தியா சந்தேகம் கொள்கிறது. அத்துடன் கிழக்கு - மேற்கு சர்வதேச கப்பல் வழித்தடத்தில் தெற்காசிய தீவு நாடுகள் இரண்டுமே மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே, இந்தியப் பெருங்கடலை நோக்கிய சீனாவின் எதிர்கால பார்வையின் முக்கியமான நகர்வாகவே சீன இராணுவக் குழுவின் இந்தப் பயணம் கருதப்படுகின்றது. (ம)

## இலங்கையில் கால்பதிக்கும் 'யுனைட்டெட்'

கொழும்பு, மார்ச் 18

அவுஸ்திரேலிய எரிபொருள் விற்பனை நிறுவனமான யுனைட்டெட் பெற்றோலிய நிறுவனம் இவ்வாண்டு நடுப்பகுதியில் இலங்கையில் எரிபொருள் விற்பனை நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கடந்தமாதம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை யுனைட்டெட் பெற்றோலிய நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது. (எ-6)

## கருக்கலைப்புகள் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 18

இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன என்று பிரித்தானியாவின் லேன்ட்செட் மருத்துவ சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

நாட்டில் சமூகப் பாதுகாப்பு நிலைமை வீழ்ச்சியடைந்தமையே இதற்குக் காரணமென ஆய்வுமூலம் தெரியவந்துள்ளதாக நிபுணத்துவ மருத்துவர் ஜீ.ஜீ. சமால் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமூகப் பாதுகாப்பு நிலைமைகளில் காணப்படும் குறைபாடு காரணமாகப் பாலியல் வன்கொடுமைக்குள்ளாகும் சிறுமியரின் எண்ணிக்கை உயர்வடைந்து காணப்படுகிறது.

பால்வினை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அவற்றுக்குச் சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவர்கள் பலர் வெளிநாடு சென்றுள்ளதால் சவால்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## வேலைவாய்ப்பு அதிகரிப்பு

நாட்டில் வேலை வாய்ப்பு வீதம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நிறுவனங்கள் புதிய பணியாளர்களை உள்வாங்குவதால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. கடந்த ஜனவரி மாதம் 48.5 வீதமாகக் காணப்பட்ட வேலை வாய்ப்பு வீதம் பெப்ரவரி மாதம் 51 வீதமாக அதிகரித்துள்ளது. (எ-இ)

## விபத்தில் ஒருவர் சாவு; 37 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 18

கொழும்பு , கண்டி பிரதான வீதியில் யஹெலத்தன பிரதேசத்தில் நடந்த பஸ் விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், 37 பேர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் கண்டி, நெல்லிக்கலை சர்வதேச பௌத்த மத்திய நிலையத்துக்கு வழிபாட்டுக்குப் பக்தர்களை ஏற்றிச்சென்ற பஸ்சே தொழில்நுட்பக்கோளாறுகாரணமாக வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## சுட்டெரிக்கும் வெப்பம்; சிறுவர்கள் அவதானம்

*மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை*

கொழும்பு, மார்ச் 18

கடுமையான வெப்பம் நிலவும் இந்த நாள்களில் குழந்தைகளிடையே நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் பெற்றோருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் தோல்நோய் நிபுணர் மருத்துவர் இந்திரா கஹவிட்ட தெரிவித்துள்ளதாவது:-

குழந்தைகளிடையே ஒருவித மயக்கம் அல்லது தாகம், வாந்தி போன்ற அறிகுறிகள் இருந்தால் அதனை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும். தற்போதைய வெப்பமான காலநிலை காரணமாக தோல் ஒவ்வாமை நோய்களும் அதிகரிக்கக்கூடும்.

தோல்அரிப்பு, வியர்வையால் கொப்புளங்கள், வியர்வை தேங்கி பூஞ்சை போன்றவையால் இந்தத் தொற்றுகள் ஏற்படக்கூடும். கடுமையான வெயிலில் வெளியில் செல்பவர்கள் தொப்பி மற்றும் குடைகள் போன்றவற்றைப் பயன்படுத்துவது முக்கியமானது. இரண்டு லீற்றருக்கும் அதிகமான நீரை அருந்தவேண்டும். சிறுவர்களுக்கு ஏற்படும் நீரிழப்பை தவிர்ப்பதில் பெற்றோர் அவதானமாக இருக்கவேண்டும் - என்றார். (ச-இ)



## புதினம் தெரியுமோ?

'பிக் மட்ச்' என்டாலே யாழ்ப்பாணப் பள்ளிக்கூடப் பெடியளுக்கு கொண்டாட்டம் தான். பற்றிக்ஸ் - ஜப்னா கொலிஜ், சென்ரல் - சென்.ஜோன்ஸ், யாழ். இந்து - கொழும்பு இந்து என்டு இந்தமுறை மூண்டு பிக்மட்ச் நடந்து முடிஞ்சிருக்கு.

பள்ளிக்கூடக் கொடியை கழுத்தில போட்டபடி, ' ட்ரம் ' ஒண்டை அடிச்சு, தங்கட பள்ளிக்கூடத்தின்ர பெருமையைச் சொல்லுறமாதிரி பாட்டுகள், கோஷங்கள் எண்டு றோட்டு முழுக்க ஊர்கோலம் போவினம். சந்தியள், ரியூசன்கள், பள்ளிக்கூடங்கள் எண்டு இந்த 'பிக்மட்ச்' கச்சேரி களைகட்டும். பெண்பிரசுகள் வரேக்குள்ள இந்தப் பாட்டுச் சத்தம், கோஷம் எல்லாம் இன்னும் பெரிசாக் கேக்கும். இது இண்டைக்கு நேற்றைக்கு வந்த வழக்கமில்லை. காலங்காலமா இப்பிடித்தான் நடக்குது. இடைக்கிடை கடைக்காரரும் காசு, கீசு குடுப்பினம். அந்தக் காசில ஏதும் வாங்கிச் சாப் பிட்டிட்டு, 'பிக் மட்ச்' ஊர்கோலம் களைகட்டும். கிரவுண்டுக்க மட்ச் நடந்தாலும் யாழ்ப்பாணம் முழுக்க, அந்த மட்ச் நடக்கிறமாதிரி ஒரு உணர்வைக் கொண்டுவாறது இப்பிடியான 'பிக் மட்ச்' கச்சேரியள்தான். ஆனால் எல்லாம் அளவோட இருக்கோணும். அளவுக்கு மிஞ்சினால் அஜின மோட்டோவும் நஞ்சு.

இந்தமுறையும் 'பிக்மட்ச்' கச்சேரி அறம்புறமா நடந்தது. ஆனால் வழக்கத்தைவிட இந்தமுறை 'ஏன் இப்பிடிச் செய்யிறாங்கள்' எண்டு சனமே முகத்தைச் சுழிக்கவைக்கிறமாதிரி சில சம்பவங் களும் நடக்காமல் இல்லை. ரியூசன்களுக்கு முன்னாலை இந்த 'பிக்மட்ச்' குரூப்காரர் நாலைஞ்சு 'ட்ரம்ஸை' கொண்டுபோய் அடிச்சு, பாட்டுப்படிச்சு பைலா ஆடினதால உள்ளுக்க படிப்பிக்கவே கஷ்டமா இருந்த தெண்டு ரியூசன் மாஸ்ரர்மார் குறைப்படுகினம். ஓ.எல். எக்ஸாம் வரப்போற நிலையில இப்பிடி கிழமையில ஒருநாள் நடக்கிற கிளாஸையும் நடத்தவிடாமல் சிலர் ரியூசனுக்குள்ள புகுந்து பாட்டுப்படிச்சு பைலா ஆடின கதையளும் நடந்திருக்கு. அதோட றோட்டுக்கு நடுவில வைச்சு 'ட்ரம்ஸை' அடிச் சதால கிளாஸுக்குப் போன பிள்ளையளை ஏத்த வந்த சனமும், வழக்கமா அந்த றோட்டால ஓடியாடித்திரியிற ஆக்களும் ஆமியின்ர 'கொன்வே' மாதிரி கனநேரம் வெய்ட் பண்ணித் தான் போக வேண்டியிருந்ததாம்.

இதைவிட முக்கியமான சம்பவம், யாழ்ப்பாணம் நாவலர் றோட்டில நடந்ததாம். இந்த 'பிக் மட்ச்' பைலாக் கும்பல் ஒரு மோட்டார் சைக்கிளில கொடியையும் கட்டிக்கொண்டு ஹெல்மெட்டும் போடாமல் ஸ்பீட்டாப் போயிருக்கினம். அவை போற பக்கத்துக்கு எதிர்ப் பக்கமா இன்னொரு குடும்பம் பைக்கில வந்திருக்கு. ஹெல்மெட் இல்லாமல்போன பிக்மட்ச் காரர் தங்களுக்கு முன்னுக்குப் போய்க் கொண்டிருந்த ஓட்டோவை 'ஓவர் ரேக்' பண்ணிக்கொண்டு அங்கால போக நினைச்சு ஒரு வெட்டு வெட்டியிருக்கினம். அந்த வெட்டில எதிர்ப் பக்கமா வந்த மோட்டார்சைக்கிள் முட்டுப்பட்டு, அதில வந்தவை றோட்டிலையே குப்பிற விழுந்திட் டினம். அதுக்குப் பிறகாவது கீழ இறங்கி, அடிபட்டுக் கிடக்கிறவைக்கு என்ன நடந்தது எண்டு பார்த்து உதவிசெய்ய மனம்வராமல், 'பிக்மட்ச்' காரர் ஒண்டுமே நடக்காதமாதிரி அங்கால போயிருக்கினம். ஒழுக்கம்தான் இல்லை யெண்டால் உதவி செய்யிற குணமுமோ காணாமல் போட்டுது? ஏலுமட்டும் இந்த 'பிக்மட்ச்' கொண்டாட்ட கும்பலை ஒரு 'கொண்ட்ரோலுக்க ' வைச்சிருக்காட்டி. அது அடிதடிக் கும்பலாவும் மாறச் சான்ஸ் இருக்கு.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய உற்பத்திகளை மேம்படுத்தாத அரசு!

## நாமல் ராஜபக்ச கூறுகின்றார்



கொழும்பு, மார்ச் 18
தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் அவதானம் செலுத்துவதில்லை. சர்வதேச நாணயநிதியத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மாத்திரம் செயற்பட்டால் சமூகக் கட்டமைப்பில் முரண்பாடுகள் மிகுதியாகும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஒப்புக்கொண்டுள்ளார்.
மஹரகமவில் நேற்று இடம் பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை நாங்கள் தெரிவு செய்தோம். பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவி வகிக்கிறார்கள். ஆனால், பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதே உண்மை. தேசிய உற்பத்திகளை மேம்படுத்த நடைமுறைக்குச் சாத்தியமான திட்டங்கள் எதையும் அரசாங்கம் செயற்படுத்துவதில்லை. கடன் பெறுவதை மாத்திரமே இலக்காகக் கொண்டுள்ளது. இந்த நிலைமை மாற்றம்பெற வேண்டும்" - என்றார். (ம)

## போலி விசா; ஒருவர் கைது


போலியான கனேடியக் கடவுச்சீட்டில் கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவு, குடியகல்வு விசாரணைப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதான இலங்கையில் உள்ள தரகர் ஒருவருக்கு 40 இலட்சம் ரூபாவைக் கொடுத்து இந்தப் பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## பஸிலின் அழைப்பை நிராகரித்த கட்சிகள்!

கொழும்பு, மார்ச் 18
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு பஸில் ராஜபக்ச விடுத்துள்ள அழைப்பை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது. அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் இதே நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது.
நாட்டின் நலன்கருதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என புதியதொரு கூட்டணிக்கு பஸில் ராஜபக்ச அழைப்பு விடுத்திருந்தார்.
"நாட்டை வங்குரோத்தாக்கிய தரப்புகளுடன் எவ்வாறு இணைந்து செயற்படுவது?" என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.
"மொட்டுக் கட்சி வங்குரோத்து அடைந்துவிட்டது. எனவேதான் இப்படியான கதைகள் வருகின்றன. மக்களைத் திசைதிருப்பும் நோக்கிலேயே இப்படியான யோசனைகள் வருகின்றன" என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (எ-44)

## மரத்தை வெட்டிய தகராறு; ஒருவர் வெட்டிக்கொலை

கொழும்பு, மார்ச் 18
மரத்தை வெட்டியதால் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மிரிஸ்ஸ பிரதேசத்தில் நடந்துள்ளது.
உயிரிழந்தவர் 38 வயதானவர் என்றும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)




சுன்னாகம் பாரம்பரிய றோட்டறிக் கழகமும், பழுனுகம றோட்டறிக் கழகமும் இணைந்து சுன்னாகத்தைச் சேர்ந்த பொருளாதாரத்தில் நலிந்த பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றுக்கு, கோழிகளையும், கூடொன்றையும் வழங்கின. இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (எ-125)



## மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 18
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலய சர்வதேச மகளிர்தினம், "பெண்களுக்கான ஆதரவின் மூலம் பொருளாதார மாற்றம் நெருக்கடிக்கு ஒரு பதிலளிப்பு" என்ற தொனிப்பொருளில் மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தலைமையில் யாழ்.தனியார் விடுதியில் அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் சமகால பொருளாதார நெருக்கடிக்குள் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் துறைசார் அதிகாரிகளின் கருத்துப்பரிமாறல்கள் இடம்பெற்றன. (எ-20)

## பங்குனித் திங்கள் ஆரம்பம்; மட்டுவில் கத்தரிக்கு மவுசு

யாழ்ப்பாணம், மார்ச் 18
மட்டுவில் கத்தரிக்காய்க்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
மட்டுவில் கத்தரிக்காய் அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில் சந்தைகளுக்கு அவை அதிகளவில் எடுத்துவரப்படுகின்றன.
அதேவேளை இன்று முதலாவது பங்குனித் திங்கள் ஆரம்பமாகின்றது. அதனையொட்டி பன்றித்தலைச்சி அம்மன் கோயிலில் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.
இந்தநிலையில் மட்டுவில் கத்தரிக்காய்க்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் சாவகச்சேரி சந்தையில் கிலோ 180 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (எ-17)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். விற்பனையும் இலாபமும் உண்டாகும்.

**இடபம்:** ஆதாயம் உண்டாகும். பணிச்சுமையின் காரணமாக உடல்அசதி உண்டாகும். தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் மனஅமைதி பெறலாம். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். அம்பிகையை வழிபட சிரமங்கள் குறையும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். செலவுகள் ஏற்படக்கூடும். பிணக்குகள் நீங்கும். உங்கள் முயற்சிக்கு உதவிகரமாக இருப்பார்கள்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். ஆதாயமும் கிடைக்கும். நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள்.

**சிம்மம்:** விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும். அம்பிகையை வழிபடுவது நலம் தரும். முருகப்பெருமானை வழிபட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். பணிச்சுமையின் காரணமாக உடல் அசதி ஏற்படக்கூடும்.

**கன்னி:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படும் நாள். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். இடையூறுகள் ஏற்படும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். பிணக்குகள் நீங்கும். மகிழ்ச்சி உண்டாகும். வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பால் விற்பனை அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். முயற்சிகளைத் தொடங்குவது நல்லது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கழுத்து நெரிக்கப்படும் கருத்துச் சுதந்திரம்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் ச.லலீசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்திய பட்டிமன்றத்தில், இலங்கையில் இன நல்லிணக்கத்துக்கு எதிராக இளைஞர்களைத் தூண்டினாரா? என்ற கோணத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஈழத்தமிழ்ச் சமுதாயத்தில் தற்போது இளைஞர் அமைப்புகளின் எழுச்சி அவசியமானதா? அவசியமற்றதா? என்ற தலைப்பில் இடம்பெற்ற பட்டிமன்றத்தை மையமாகவைத்தே கல்வி அமைச்சின் விசாரணை வளையத்துக்குள் அவர் கொண்டுவரப்பட்டிருக்கிறார்.

கலாசாலை அதிபரும் சொற்பொழிவாளருமான லலீசன் மீதான விசாரணையை வெறுமனே ஓர் ஒழுக்காற்று நடவடிக்கையாகவோ அல்லது கல்வித்துறையின் நியாய - ஆதிக்க எல்லைக்குட்பட்ட விடயமாகவோ கொள்ளமுடியாது. சிங்களப் பேரினவாத சித்தாந்தத்தால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட உச்சக்கட்ட அடக்குமுறையின் – உரிமை மறுப்பின் தொடர்கதையாகவே இந்த விசாரணை நகர்வுகளைப் பார்க்க வேண்டியிருக்கின்றது.

ஈழத்தமிழ்ச் சமூகத்தில் இளைஞர்களின் எழுச்சியை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்ட ஓர் உரையாடல் எவ்வாறு நாட்டின் இன நல்லிணக்கத்தைப் பாதிக்கும்? என்ற கேள்வியும் இங்கெழுவது தவிர்க்கப்பட முடியாததாகின்றது. அத்துடன், ஈழத்தமிழ் இளைஞர்கள் எந்தவொரு எழுச்சியையும் பெற்றுவிடக்கூடாது, அவர்களின் சிந்தனைகள் இனத்தின்பாலான அபிலாஷைகளின் பாற்பட்டதாக அமைந்துவிடக்கூடாது என்று சிங்களப் பேரினவாத அரசாங்கம் கொண்டிருக்கும் எழுதப்படாத கொள்கையையும் அதுசார் நிகழ்ச்சி நிரலையுமே அதிபர் லலீசன் மீதான நடவடிக்கைகள் காலக்கண்ணாடியாக உணர்த்தி நிற்கின்றன.

ஈழத் தமிழ்ச் சமூகத்துக்குள்ளும், இளைஞர்கள் மத்தியிலும் போதைப் பாவனைகளும் இன்னும் விதவிதமான பிறழ் கலாசாரங்களும் ஆழமாகத் திணிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவற்றில் இருந்து விடுபடுவதற்கு இனத்தின்பாலான சிந்தனையையும் நன்நெறி நடத்தைகளையும் பலரும் ஊக்குவித்தே வருகின்றனர், அவர்களில் லலீசனும் ஒருவர். ஐஸ், கஞ்சா, ஹெரோய்ன், ஹொக்கெய்ன், பாலியல் துர்நடத்தைகள், கலாசாரப் பிறழ்நெறிகள் என இளைஞர்கள் மேய்ப்பனில்லா ஆடுகள் போன்று அங்கலாய்த்துத் திரியும் இக்காலத்தில், இளைஞர்களை வழிப்படுத்தும் வகையிலான பட்டிமன்றத்தையோ அல்லது சிந்தனையூட்டத்தையோ மேற்கொண்டமைக்காக அதிபர் லலீசனை எத்தனை பாராட்டினாலும் அத்தனையும் தகும். லலீசன் மட்டுமல்ல இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும் அணுவிஞ்ஞானியுமான அப்துல்கலாம், 'பிரபஞ்சத்தின் மகன்' என்றறியப்பட்ட விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங், அலிபாபாவின் நிறுவுநர் ஜேக் மா, உலகப்பணக்காரர்களான பில்கேட்ஸ், ஜெப் பெஸோஸ் என அனைவருமே இளைஞர் சமூகத்தின் எழுச்சியைக் கருத்திற்கொண்டே செயற்பட்டனர் –செயற்படுகின்றனர். இவ்வாறிருக்கையில், லலீசன் மீதான விசாரணையானது ஈழத்தின் இளைஞர்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்று சிங்களப் பேரினவாதம் கொண்டிருக்கும் ஆழமான ஆசையையே பறைசாற்றுகின்றது.

தமிழர்களை வெட்டுவேன், கொத்துவேன் என்று பகிரங்கமாக மிரட்டல் விடுக்கும் மேர்வின் சில்வாவையும் எத்தனையோ பௌத்த தேரர்களையும் கொஞ்சமேனும் அடக்கிவைக்காத அரசாங்கம், 'கல்விச் சமூகத்தைச்' சேர்ந்த அதிபர் லலீசன் வெளிப்படுத்திய ஆரோக்கியமான கருத்துகளுக்காக வரிந்துகட்டிக்கொண்டு நிற்பது அபத்தத்திலும் அபத்தம்...!




# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையில் ஆயிரத்து 500 பக்கங்கள் மாயம்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றச்சாட்டு

**கொழும்பு, மார்ச் 18**

**திருச்சபைக்கு அரசாங்கம் வழங்கிய ஈஸ்டர் தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் முக்கியமான ஆயிரத்து 500 பக்கங்கள் காணப்படவில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் 6 இறுவட்டுகளில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை வழங்கியது நாங்களும் சட்டத்தரணிகளும் அதனை ஆராய்ந்தோம். 70 ஆயிரம் பக்கங்கள் உள்ளன. அரசாங்கம் ஆயிரத்து 500 பக்கங்களை எங்களுக்கு வழங்கவில்லை.

சஹ்ரான் ஹாசிமின் மனைவி மற்றும் சாரா ஜெஸ்மின் போன்ற முக்கிமான சாட்சியங்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அடங்கிய ஆவணங்களே வழங்கப்படவில்லை.

அமைச்சர்கள், அதிகாரிகள் 99 வீத விசாரணைகள் முடிவடைந்துவிட்டன எனக் கூறுகின்றனர். ஆனால், நாங்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவின்அறிக்கைகளைஆராய்ந்த வேளை அது உண்மையில்லை என்பதை உணரமுடிந்தது. எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# உயர்வடையும் வெப்பநிலை; கல்வியமைச்சு அறிவுறுத்து

நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக பாடசாலைகளில் நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகளை ஒத்திவைக்குமாறு அதிபர்களுக்கு கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கடந்த சிலவாரங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் அதிக வெப்பத்துடனான காலநிலை நிலவுகிறது. அதனால் பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்வுகளை ஒத்திவைத்து மாணவர்களைப் பாதுகாக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது (ச-இ)

# இலங்கை ரயிலில் மொட்டை மாடி!

இலங்கை ரயில்வேயின்பிரதான இயந்திரப் பொறியியல் திணைக்களம் திறந்த பார்வைத் தளத்தை உள்ளடக்கிய ரயில் பெட்டியை உருவாக்கியுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுசுற்றுலாப் பயணிகள் மலையகத்தின் இயற்கைக்காட்சிகளை ரசிக்க ஏதுவாக இந்த வசதி மலையக ரயில் சேவையில் எதிர்காலத்தில்சேர்க்கப்படும். பாவனையில் இல்லாத பழைய ரோமானிய ரயில் பெட்டியே 30 மில்லியன் ரூபா செலவில் இவ்வாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# டெங்கு தொற்றால் 7 பேர் சாவு

கொழும்பு, மார்ச் 18

கடந்த இரண்டு மாதங்களில்டெங்குத்தொற்றால் நாட்டில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தக் காலப்பகுதியில்18 ஆயிரத்து 556 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# சுகாதாரச் சீர்கேடான ஐஸ்கிறீம் தண்டம் விதித்தது நீதிமன்றம்!

சுகாதாரச்சீர்கேட்டுடன்ஐஸ்கிறீம் விற்பனை செய்த நிறுவனத்துக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தால் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் இல்லமெய்வன்மை போட்டி அண்மையில் இடம் பெற்றது. இதன்போதே சுகாதாரச் சீர்கேடான வகையில் ஐஸ்கிறீம் விற்பனை செய்வது சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அவதானிக்கப்பட்டது.

இதையடுத்து 7 குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐஸ்கிறீம் விற்பனை செய்த நிறுவனத்தின் உரிமையாளருக்கு எதிராக கடந்த வியாழக்கிழமை வழக்குத் தொடரப்பட்டது. அன்றையதினமே வழக்கை விசாரித்த நீதிவான் குற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து உரிய தரப்பினருக்கு எதிராக 42 ஆயிரம் ரூபா தண்டமாக விதித்தார். (ம-26)

**நாளை**

19.03.2024
**செவ்வாய்க்கிழமை**
**பங்குனி – 06**
சுபநேரம் : 10.48 - 12.18
ராகுகாலம் : 03.18 - 04.48

**நாளொரு நல்வார்த்தை**


**நான் தாழ்ந்தவன், நான் பாவி என்று எப்போதும் நினைப்பவன் அவ்வாறே ஆகிவிடுகிறான்.**

**– இராமகிருஷ்ண பரமஹம்சர்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு தாரைவார்ப்பு தி.மு.க.வின் துரோகம்

## அண்ணாமலை கொதிப்பு



**சென்னை, மார்ச் 18**

**கச்சதீவு விவகாரத்தில் தி.மு.க. அரசே தமிழகத்துக்கு மிகப்பெரும் துரோகத்தைச் செய்தது என்று ஆளும் பா.ஜ.க.வின் தமிழகத் தலைவரான அண்ணாமலை விமர்சித்துள்ளார்.**

கச்சதீவை மீட்க கடந்த 10 ஆண்டுகளில் பா.ஜ.க. அரசு செய்தது என்ன? தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறைபடுவதையும், சித்திரவதைக்கு ஆளாவதையும் தடுத்து நிறுத்தாதது ஏன்? தமிழகத்துக்குச் செய்து கொடுத்த சிறப்புத் திட்டங்கள் என்ன? தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு வழங்கிய பதிலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் அண்ணாமலை.

முதல்வர் ஸ்டாலினுக்குப் பதிலளித்து வெளியிட்டுள்ள தனது எக்ஸ் தளப்பதிவில், கடந்த 1974ஆம் ஆண்டு தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசால், கச்சதீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டது. அதன்பிறகு பலமுறை, மத்திய அரசில், பசையான அமைச்சர் பதவிகளை மட்டும் வாங்கிக் கொண்டு, கச்சதீவு விவகாரத்தில் கள்ள மௌனம் மட்டுமே சாதித்துக் கொண்டிருக்கும் தி.மு.க.வுக்கு, தேர்தல் காலங்களில் மட்டுமே அதன் ஞாபகம் வருவது விந்தை. கச்சதீவு விடயத்தில் தி.மு.க.வின் மறைந்த தலைவர் கருணாநிதி செய்தது துரோகம் என்றும் அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார். (ம)

## 2047ஆம் ஆண்டில் பலமான இந்தியா!

### மோடி வலியுறுத்து

புதுடில்லி, மார்ச் 18

2047ஆம் ஆண்டில் பலமான இந்தியாவை உருவாக்குவதே எனது இலக்கு. இந்தியா அதற்கேற்ப அதிவேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்றது என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், "2029 மக்களவை தேர்தலுக்கும் இப்போதே தயாராகி விட்டீர்களா'?' என்று மோடியிடம் கேட்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த பிரதமர் மோடி, "நீங்கள் 2029ஆம் ஆண்டிலேயே சிக்கிக்கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால், நான் ஏற்கனவே 2047 ஆம் ஆண்டுக்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

"இன்று மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவைக் கொண்டாடுவதற்கான பணிகள் தொடங்கியுள்ளன. ஒட்டுமொத்த உலகமும் நிச்சயமற்ற நிலையை எதிர்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இந்தியா தொடர்ந்து அதிவேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது என்பது மட்டும் உறுதி" என்றும் மோடி மேலும் தெரிவித்தார். (ம)


## 'ரிக்ரொக்' செயலிக்கு அமெரிக்கா தடை

உலகளவில் பொழுதுபோக்குக்காக அதிகம் பயன்படுத்தப்படும் செயலிகளில் ஒன்றான 'ரிக்ரொக்' செயலிக்கு அமெரிக்காவில் தடை விதிக்கப்பட்டு, சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சீனாவுக்குச் சொந்தமான செயலியான 'ரிக்ரொக்' மூலம் அமெரிக்கர்களை சீன அரசு உளவு பார்க்கக்கூடிய வாய்ப்பிருப்பதால், அந்தச் செயலியால் தேசப்பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனத் தெரிவித்து இந்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## உக்ரைன் விவகாரம்; நேட்டோ வேண்டாம்!

### இத்தாலி பகிரங்கமான எச்சரிக்கை



உரோம், மார்ச் 18

உக்ரைனுக்கு நேட்டோ படைகளை அனுப்புவது மூன்றாம் உலகப்போரையே கொண்டுவரும் என்று இத்தாலியின் வெளிவிவகாரத்துறை எச்சரித்துள்ளது.

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யா தோல்வியடைய வேண்டுமாயின் எந்த எல்லைக்கும் செல்லத் தயார் என்று அண்மையில் தெரிவித்திருந்த பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன், தேவைப்பட்டால் உக்ரைனில் நேட்டோ படைகளை நிலைநிறுத்துவோம் என்றும் எச்சரித்திருந்தார்.

இதையடுத்தே, உக்ரைனுக்குள் நேட்டோ படைகள் வந்தால் அது மூன்றாம் உலகப்போரை ஏற்படுத்தும் என்று இத்தாலியின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அன்டோனியோ தஜானி எச்சரித்துள்ளார். (ம)



## டைட்டானிக்கை தேடி அமெரிக்கா பயணம்

வொஷிங்டன், மார்ச் 18

கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலின் சிதைவுகளைக் கண்டுபிடிக்கும் வகையில் திட்டமிட்ட பயணம் ஒன்றை அமெரிக்க அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது.

கடந்த வருடம் டைட்டானிக் சிதைவுகளைத் தேடிச் சென்ற 'டைட்டன்' என்ற நீர்மூழ்கிக் கப்பல் வெடித்து விபத்துக்குள்ளாகியிருந்தது.

இந்தநிலையில் எதிர்வரும் காலங்களில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சட்டவிதிகள் பேணப்பட்டு பயணம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த ஆய்வுப் பயணம் எதிர்வரும் மே மாதம் தொடங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)




## ரஷ்ய எண்ணெய்க் குதங்கள் மீது உக்ரைன் தீவிரமான தாக்குதல்!

மொஸ்கோ, மார்ச் 18

ரஷ்யாவில் உள்ள எண்ணெய்க் குதங்கள் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது உக்ரைன் ஆளில்லா விமானங்களால் தீவிரமான தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ரஷ்யா மீதான வான்வழித் தாக்குதல்களை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது உக்ரைன். குறிப்பாக ரஷ்யாவின் எண்ணெய்க் கிணறுகள் மற்றும் எண்ணெய்க் குதங்கள் என்பவற்றை இலக்குவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது. நேற்றும் ரஷ்யாவின் எரிபொருள் தளங்கள், எண்ணெய்க் குதங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் என்பவற்றின் மீது உக்ரைன் தீவிரத் தாக்குதலை நடத்தியுள்ளது.

உக்ரைனின் வான் தாக்குதல்களையடுத்து, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரையில் ரஷ்யாவின் பெல்கோரோட்டில் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. 'ரஷ்யாவில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்று வரும் நிலையில், ரஷ்யாவின் பலத்தை உக்ரைன் குறைமதிப்புக்கு உட்படுத்தி வருகின்றது. இதற்கு விரைவில் உக்ரைனுக்குப் பதில் வழங்கப்படும் என்று ரஷ்ய இராணுவம் உக்ரைனை எச்சரித்துள்ளது. (ம)



## உக்ரைன் - ரஷ்யப் போரில் ஜேர்மனியும் தலையிடுகிறது

பெர்லின், மார்ச் 18

உக்ரைனுக்குத் தேவையான ஆயுதங்கள் சிலவற்றை வழங்கவிருப்பதாக ஜேர்மனி அறிவித்துள்ளது.


ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைன் கோரும் தொலைதூர ஆயுதங்களை வழங்கினால், அது இந்தப் போரில் ஜேர்மனி நேரடியாகப் பங்குபற்றியதாகக் கருதப்படும் என்று ரஷ்யா அறிவித்திருந்த நிலையில், அத்தகைய ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்குவதை ஜேர்மனி தவிர்த்தே வந்தது. எனினும், உக்ரைனுக்குத் தேவையான ஆயுதங்களை வழங்குமாறு ஜேர்மனிக்குப் பிரான்ஸின் அதிபர் மக்ரோன் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வந்தார். இந்தப் பின்னணியிலேயே தொலைதூர ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்குவதற்கு ஜேர்மனி இணங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போராட்டத்துக்கு மத்தியிலும் தென்னக்கோனுக்கு வரவேற்பு!

வவுனியா, மார்ச் 18

வவுனியாவில் பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் இடம்பெற்று வந்த நிலையில், வவுனியாவுக்குச் சென்ற பொலிஸ்மா அதிபருக்கு அந்தப்பகுதி மக்களால் வரவேற்பும் அளிக்கப்பட்டுள்ளது.



நெடுங்கேணி, வெடுக்குநாறிமலையில் பொலிஸாரின் வன்முறையால் கைதுசெய்யப்பட்ட 8 பேருக்கும் நீதிகிடைக்கவேண்டும் என வலியுறுத்தி, வவுனியாவில் மாபெரும் போராட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் போராட்டத்தில் அதிகளவான பொதுமக்கள் கலந்துகொண்டு நீதிக்காகக் குரலை முப்பினர்.

இதேவேளை- வவுனியாவில் சமுதாய பொலிஸ்குழுவின் நிகழ்வு ஒன்றுக்காக, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான்அலஸ் மற்றும் பொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் சென்றிருந்தனர். அந்த நிகழ்வில் விசேட பூசை வழிபாடுகளும் மூன்றுக்கு மேற்பட்ட பூசகர்களால் மேற்கொள்ளப்பட்டதுடன், பொலிஸ் மா அதிபருக்கு வரவேற்பும் வழங்கப்பட்டது. (ப-110)


## பெண் உதவியாளர்கள் தேவை

பளையில் உள்ள பூமரங்கள் விற்பனை செய்யும் நிலையத்திற்கு பெண் உதவியாளர்கள் தேவை.
(வயதெல்லை - 25)

கேதீசன் 077 958 5846

## மணமகள் தேவை

1983, இந்து கௌரவ குடும்பம், கார்த்திகை 4 ம் பாதம், 12 ல் செவ்வாய், 36 கிரகபாவம் கொண்ட அரச உத்தியோகம் பார்க்கும் சைவபோசன மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

(cs.54410) (N-1)

075 023 8944

## வேலை ஆட்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபலியமான புடைவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் வேலை ஆட்கள் உடன் தேவை.

மேலும் -

1. பில்கிளாக்
2. பைக்கிங் செய்பவர்
3. வரவேற்பாளர்
4. விற்பனையாளர்

(cs.41928) (N-1)

தொடர்பு: 076 962 4477


# மலேஷியாவில் இலங்கையர் கைது

மலேஷியாவில் அடுக்குமாடிக் குடியிருப்பில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இலங்கையர்கள் உட்பட 158 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மலேஷிய குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மலேசிய குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தால் இந்தக் குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது . வெளிநாடுகளைச் சேர்ந்த 358 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அவர்களில் 158 பேருக்கு மலேசியாவில் தங்குவதற்கு உரிய விசா இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


## யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
## பழைய மாணவர் ஆசிரியர் சங்க பொதுக்கூட்டம் -2024
## அழைப்பு

எமது கல்லூரியில் பழைய மாணவர் ஆசிரியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 31.03.2024 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு **கல்லூரியின் நாகேந்திர ராஜா மண்டபத்தில்** நடைபெற உள்ளது. ஆகவே அனைத்துப் பழைய மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:- 150வது ஆண்டு நிறைவு விழா தொடர்பாக கலந்து ஆலோசிக்கப்படும்.

தலைவர்
திரு.செ.பேரின்பநாதன்

செயலாளர்
திரு.ம.ஸ்ரீபாஸ்கரன்

cs.41936) (N-1)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திருவாளர் இலட்சுமணன் இளங்கோவன்

(பிரதம செயலாளர் வடக்கு மாகாணம்)

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

கல்வியில் சிறந்து உழைப்புக்கு
உயிர் தந்த வித்தகனே
அகிலம் முழுதும் உவப்பெய்ய
சேவையே கண்ணாக கருக் கொன்றாய்
கண்ணகியும் நாகேஷ்வரியும்
துணைநிற்க! உந்தன் சேவைப்பணி
வையகம் எங்கும் சிறக்க
வாழ்க என வாழ்த்தி பாராட்டி
ஆசிகள் நல்கும்.




வாழ்த்துவோர் :

திரு.இலட்சுமணன் குடும்பம்
புங்கையூர்.

திரு. திருமதி பரமலிங்கம் குடும்பம்
நயினை.

(cs 28213) (N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தாலம்’ விற்பனையகம் இன்று திறப்பு

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் ‘தாலம்’ பனம்பொருள் விற்பனை நிலையம் கே.கே.எஸ். வீதியிலுள்ள மாவட்ட கிராமிய வங்கி சமாச வளாகத்தில் இன்று திங்கட்கிழமை நண்பகல் திறந்து வைக்கப்படவுள்ளது. சமாசத்தின் தலைவர் என்.செல்வராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு விற்பனை நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார். (ச-17)

## பங்குனித் திங்கள் அபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

உரும்பிராய் காளி அம்பாள் ஆலயத்தின் பங்குனித் திங்கள் அபிஷேகம் இன்று திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அபிஷேகம், விஷேட பூசைகளைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

+++ +++ +++

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகி அம்மன் ஆலயத்தின் பங்குனித் திங்கள் உற்சவம் இன்று சிறப்பாக நடைபெறவுள்ளது.

முதலாம் பங்குனித் திங்கள் உற்சவம் இன்று மாலை 4 மணிக்கு கும்ப ஆராதனையுடன் ஆரம்பமாகி, அம்பாள் உள் வீதி, வெளி வீதி உலாவருவார் என்று ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## கும்பாபிஷேகம்

*யாழ்ப்பாணம், மார்ச் 18*

*வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.*

*மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை காலை 5 மணிக்கு கர்மாரம்பம் இடம்பெற்று, நாளைமறுநாள் புதன்கிழமை ஹோம வழிபாடுகள் ஆரம்பமாகவுள்ளன. தொடர்ந்து, எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு எண்ணெய்க்காப்பு ஆரம்பமாகி மறுநாள் வெள்ளிக்கிழமை நாள் முழுவதும் இடம் பெற்று 23 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 12 மணிக்கு நிறைவடையும். இதையடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மகா கும்பாபிஷேகப் பெருவிழா ஆரம்பமாகி, அதனைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலா அபிஷேகமும் நடைபெறும் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ப-100)*

## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 18

கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி, பாடசாலை மைதானத்தில் இன்று திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஆறுமுகம் வினோதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக டி.ஒ.எம். ஆர். இம்பெக்ஸ் நிர்வாக இயக்குநர் வேதநாயகம் ரெஜி பிராங்ளின், சிறப்பு விருந்தினர்களாக நெல்லியடி மத்திய கல்லூரி உதவி அதிபர் திருமதி இந்திராஜ் தேவகி மற்றும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக சிங்களப் பாட ஆலோசகரும், மும்மொழி இணைப்பாளருமான ஜோ.அ.சார்ள்ஸ் லாசரஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

+++ +++ +++

யாழ்ப்பாணம், மார்ச் 18

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டி, பாடசாலை மைதானத்தில் பதில் அதிபர் க.பிரதாபன் தலைமையில் நாளைமறுதினம் புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா ஆரியரட்ண, சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஓய்வுநிலை அதிபர் க.சண்முகதாஸ், பழைய மாணவர் வே.ராஜகுலேந்திரன், கௌரவவிருந்தினராக ஜே/329 உசன் கிராம அலுவலர் திருமதி அகல்யா வருண்ராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-159)


## கண்ணீர் அஞ்சலி



எமது சக மருந்தாளர்

**பேரம்பலம் அரவிந்தன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா பேரம்பலம்**

அவர்கள் நேற்றுமுன்தினம் (16.03.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

**மருந்தாளர்கள்**

**யாழ். போதனா வைத்தியசாலை**

(cs.54407) (N-1)



## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
## பெறுகை அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கான பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/IMP/ PW/1111-01 | Renovation of Painting Work at District Secretariat, Kilinochchi. | 5.18 மில்லியன் | C8, C7 & C6 Building | ரூபா 52000/- 24.07.2024வரை | 2000.00 |
| 2 | KN/EB/13/IMP/1 1111-02 | Disable Ramp and Main Entrance Roof Covering Work at Training Center, District Secretariat, Kilinochchi. | 2.21 மில்லியன் | C9, C8 and C7 Building | ரூபா 22000/- 24.07.2024வரை | 2000.00 |
| 3 | KN/EB/13/IMP/1 1111-03 | Laying Floor Tile in Addl G.A (Land) at District Secretariat, Kilinochchi. | 2.37 மில்லியன் | C9, C8 and C7 Building | ரூபா 24000/- 24.07.2024வரை | 2000.00 |
| 4 | KN/EB/13/IMP/1 1111-04 | Laying Floor Tile in Second floor Veranda at District Secretariat, Kilinochchi. | 1.23 மில்லியன் | C9 and C8 Building | ரூபா 13000/- 24.07.2024வரை | 1500.00 |
| 5 | KN/EB/13/IMP/1 1111-05 | Laying Floor Tile in ADS Branch at District Secretariat, Kilinochchi. | 1.14 மில்லியன் | C9 and C8 Building | ரூபா 12000/- 24.07.2024வரை | 1500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   - I. நிர்மாணப்பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (ii) இலக்க 08.05.2019 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு 5% முன்னுரிமையளிக்கப்படும்.
   - VI. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்றவேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-021 228 5663. பக்ஸ் இல:-021 228 3966)
3. கேள்வி ஆவணங்களை 19.03.2024 ஆம் திகதியிலிருந்து 09.04.2024 ஆம் திகதிவரை முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப்பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting ) 01.04.2024 ஆம் திகதி முற்பகல் 12.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி. பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம். திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/.........................." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர். திணைக்கள பெறுகைக் குழு. மாவட்டச் செயலகம். கிளிநொச்சி எனும் முகவரிக்கு 10.04.2024 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்குமுன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
8. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
9. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

திருமதி.ந.இன்பராஜ்
திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர் / மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(ஏ.ஏ.41811) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடினின் காற்று எனக்கும் வீசும்

## சொல்கிறார் வெல்கம

ரஷ்ய ஜனாதிபதி புடினைப்போல் எனக்கும் அதிர்ஷ்டம் வருகின்றது. எனது ஜாதக நிலையும் நல்லதாகவே உள்ளது. ஆதலால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயாராகவே இருக்கின்றேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கூறினேன், ஆனால், மக்கள் வாக்களித்தனர். இறுதியில் என்ன நடந்தது? நான் கூறியதுபோல நாட்டுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. எனவே, எமது கருத்துகளையும் மக்கள் செவிமடுக்கவேண்டும். எனக்குக் கட்சி இருக்கின்றது. சிறந்த தலைவராக நான் உள்ளேன். அதுமட்டுமல்ல ஜாதக நிலையும் நல்லதாகவே உள்ளது. புடினைப்போல எனக்கும் அதிர்ஷ்டம் தென்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கான அனைத்துத் தகுதியும் எனக்கு இருக்கின்றது. எனக்கு இல்லாத தகைமை என்ன? - என்றார்.

(ம-44)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம் 13 . 06 . 1931

மறைவு 17 . 02 . 2024

அமரர்

**அந்தோனிப்பிள்ளை பிலோமினா**

(பெரிய கிளி)

அம்மா


எங்கள் கண்முன்னே
நீங்கள் வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
எந்நாளும் வாழ்வீர்கள்

இல.03, 1ஆம் குறுக்கு தெரு
பாசையூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS/28232) S-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 01 . 1963

மறைவு 17 . 03 . 2024

**திருநாவுக்கரசு சிறீதரன் (குட்டியண்ணா)**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சிறீதரன் (ஓய்வு பெற்ற நூலகர் - சித்த மருத்துவத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மருந்தாளர், ஸ்ரீ முருகன் மருந்தகம்,) அவர்கள் நேற்று (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், பாலராணி (அதிபர், பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண்கள் பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், நிவேதனன் (Bm (Hons) Accounting and Finance) அவர்களின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராஜா (ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர், இலங்கை வங்கி), வசந்தகுமாரி (ஓய்வு பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஸ்ரீகாந்தா (சைவ சிறுவர் இல்லம்), சாந்தகுமாரி மற்றும் ஸ்ரீ சந்திரகுமார் (ஆசிரியர், நீர்வேலி அத்தியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வசந்தா (ஓய்வு பெற்ற நூலகர்), இராமநாதன் (ஓய்வ பெற்ற அதிபர்), செல்வராணி, ஜெகநாதன் (உரிமையாளர், பனோரமா Audio & Video), ரஞ்சினி (முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும், ஜெயறூபினி (சித்தவைத்தியர்), தர்மிகன், லக்ஷிகா (மாணவி, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), சிந்துஜா (மாணவி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், சர்மிலன் (மாணவன், தொழில்நுட்பக் கல்லூரி) அக்ஷிதி (மாணவி, யா/ இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2024) திங்கட்கிழமை மாலை 03 மணியளவில் 29/1, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று . பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**077 277 6398, 077 966 8094** (CS 28237) S-1 **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 03 . 1950

மறைவு 17 . 03 . 2024

**சொக்கலிங்கம் சண்முகலிங்கம்**

அரியாலை நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட Starter Sun என அன்பாக அழைக்கப்படும் சொக்கலிங்கம் சண்முகலிங்கம் அவர்கள் நேற்று (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - அன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், பாக்கியலட்சுமி, அன்னலிங்கம், தருமலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம், ரஞ்சிதராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சுந்தரலிங்கம் மற்றும் கமலாதேவி, பிறேமளா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2024) திங்கட்கிழமை இல.526, நாவலர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**021 222 7628** (CS 28238) S-1 **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**பரமானந்தம் சந்திராதேவி**

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரமானந்தம் சந்திரா தேவி அவர்கள் நேற்று (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பரமானந்தம் - இராசம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், பாலச்சந்திரனின் (UK - லண்டன்) அன்புச் சகோதரியும், முத்துராஜாவின் பெறாமகளும், மகிழா (UK) வின் மைத்துனியும், பிரதீப், பிரவீன் ஆகியோரின் அன்புப் பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2024) திங்கட்கிழமை மணிக்கூட்டு வீதியிலுள்ள பப்பாச்சி மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பூதவுடல் பி.ப 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**218/16, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (CS/28233) S-1

தகவல்:
பாலச்சந்திரன் (சகோதரன் - லண்டன்)
**கோ.முத்துராஜா (சிறியதந்தை)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வான வீதி ஓட்டம் அண்மையில் இடம்பெற்றது. (எ-66)

தர்மபுரம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்ட நிகழ்வு, கல்லூரி முதல்வர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. ஆண்களுக்கான மரதன் ஓட்டம் மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள ஏ-35 பிரதான வீதியில் ஆரம்பிக்கப்பட்டு விசுவமடு ரெட்பானா சந்திவரை சென்றடைந்து மீண்டும் தருமபுரம் மத்தியகல்லூரி முன்பாக வந்தடைந்தது. பெண்களுக்கான மரதன் ஓட்டம் விசுவமடு ரெட்பானா சந்தியிலிருந்து ஆரம்பித்து தர்மபுரம் மத்திய கல்லூரி முன்பாக நிறைவடைந்தது. 110 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மரதன் ஓட்டத்தில் கலந்துகொண்டனர். (ப-113)





யாழ்ப்பாணம், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவின் முதலாம் நாள் நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் பரமலிங்கம் சந்திரபாகு தலைமையில் ஆரம்பமானது. இதன்போது பருத்தித்துறை நகரத்தைச் சுற்றிய நடைபவனியும் இடம்பெற்றது. விருந்தினர்கள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோர் நடைபவனியில் ஈடுபட்டனர். (ம-125)



இந்திய தருமை ஆதீனத்தினரால் சிவஸ்ரீ ந. பிரசாந்தக் குருக்களுக்கு 'சிவாகம கலாநிதி' பட்டம் வழங்கப்பட்டமையையிட்டு அவரைக் கௌரவிக்கும் நிகழ்வு வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரி உற்சவத்தில் இடம்பெற்றது. (ச)



கிரிசலிஸ்நிறுவனத்தின் பிரிட்ஜ் செயற்றிட்டத்தின் கீழ் 'பெண்கள் தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்களினூடாக, அமைதி மற்றும் உள்ளடங்கலான தாங்குதிறன் மிக்க சமூகங்களை மேம்படுத்தல் எனும் தொனிப் பொருளில் 'அணி திரட்டல்' சிறப்பு வலுவூட்டல் பயிற்சி யாழ்ப்பாணம் ஜே கெஸ்ட் விடுதியில் அண்மையில் இடம் பெற்றது. (ம)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த, தெரிவு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு 'ப்பொன்ரேறா ப்ரான்ட்ஸ் ஸ்ரீலங்கா' எனும் நிறுவனம் மூலம் பால்மா விநியோகம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ப-9)

## மரண அறிவித்தல்

தோற்றம் 30.06.1952



மறைவு 16.03.2024

## சிங்கராசா றோஸ்பெலா

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா றோஸ்பெலா அவர்கள் கடந்த (16.03.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (18.03.2024) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 964 3917 (வேவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் சடலமாக மீட்கப்பட்டார்

யாழ்., மார்ச் 18

வீட்டுக்கு வெளியில் உயிரிழந்த நிலையில் குடும்பப் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த இராசேந்திரம் செல்வரதி (வயது - 48) என்பவரே இவ்வாறு நேற்று மதியம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் கணவரும் மகளும் வாக்குவாதப்பட்டுக்கொண்டிருந்தபோது, வீட்டைவிட்டு வெளியில் சென்றுள்ளார். இந்த நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்கனவே இருதய நோய் இருந்துள்ளதாக விசாரணைகளின்போது தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை வலி. கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டிருந்தார். (ஒ-26)

# குடமுருட்டிக்குளத்தின் கீழ் 360 ஏக்கரில் சிறுபோகம்

**கிளிநொச்சி, மார்ச் 18**

**கிளிநொச்சியிலுள்ள குடமுருட்டிக்குளத்தின் கீழ் 360 ஏக்கரில், சிறுபோக நெற்செய்கையை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.**

குடமுருட்டிக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கான கூட்டம் நிறைவுபெற்று தற்போது பயிர்ச்செய்கை முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை, கூட்டத்தீர்மானத்தை மீறி, சில விவசாயிகள் மேலதிக விதைப்புகளில் ஈடுபட்டுள்ளனர் என அதிகாரிகளிடம் முறைப்பாடு கள் செய்யப்பட்டுள்ளன.

குடமுருட்டிக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையின்போது கூடுதலான விதைப்புகளில் விவசாயிகள் ஈடுபடுவது தொடர்பாக சிறுபோக நெற்செய்கைக் கூட்டங் களில் கடந்த காலங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிறுபோக நெற்செய்கைக் கூட்டத் தீர்மானத்தை உரியமுறையில் நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சட்டரீதியான பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடமுருட்டிக்குளம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளது. அந்தக் குளம் முழுமையாகப் புனரமைக்கப்படவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)



## வடமராட்சிக் கடற்கரைகளில் கழிவுப்பொருள் அகற்றம்!

வடமராட்சிக் கடற்கரையோரங்களில் உள்ள கழிவுகள் அகற்றும் செயற்பாடு பருத்தித்துறைப் பிரதேச சபையால் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெ டுக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பிரதேசசபைச் செயலாளர் அ.வினோராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பருத்தித்துறை, இன்பர்சிட்டி மற்றும் வடமராட்சி கிழக்கின் தாளையடி, வத்திராயன், ஆழியவளைப் பகுதி கடற்கரையோரங்களில் காணப்பட்ட கழிவுகள் சேகரிக்கப்பட்டு பிரதேசசபை வாகனம் மூலம் அகற்றப்பட்டன. இந்தச் செயற்பாட்டில் குறித்த பிரதேச மக்கள், பிரதேசசபை ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-100)

## வெளிநாடு...

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பொலிஸ் திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலிலேயே மேற்படி விடயம் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணப் பொலிஸ் பிராந்தியத்தில் 30 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 33 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. 4 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 14 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 18 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. 7 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸ் பிராந்தியத்தில் 17 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 46 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. 8 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸ் பிராந்தியத்தில் 53 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 116 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. 30 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பிராந்தியத்தில் 20 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 33 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. 13 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்தில் 5 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 5 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. 4 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து தொடர்ச்சியாக ஏமாற்றப்படும் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## கட்டுமரம்...

மருதங்கேணி கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவரின் கட்டுமரம் மீது இனந்தெரியாத படகு மோதியதில் கடலில் விழுந்து காணாமற்போன மீனவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கரையொதுங்கியுள்ளது.

மருதங்கேணியைச் சேர்ந்த மாரிமுத்து முத்துசாமி (வயது - 60) என்பவரே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் கட்டுமரத்தில் சென்று மீன்பிடியில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது அந்தக் கடற்பிரதேசத்தில் பிரவேசித்த மீன்பிடி படகு கட்டுமரத்தை மோதியதாக தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து கட்டுமரம் கரையொதுங்கி உள்ள நிலையில் அதில் பயணித்த மீனவர் காணாமற்போயிருந்தார்.

காணாமல் போன மீனவரைத் தேடும் பணியில் அப்பகுதி மக்களும் கடற்படை சுழியோடிகளும் ஈடுபட்டிருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை சடலம் மருதங்கேணிக் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

சடலத்தை கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் ஜெமில் பார்வையிட்டார். சடலத்தின் முகத்தில் காயங்கள் காணப்படுவதால் தடயவியல் பொலிஸாரை அழைத்து தடயங்கள் பெறப்பட்ட பின்னர் கிளிநொச்சி மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு நீதிவான் உத்தரவிட்டார். இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ஒ-100)

## கைதான...

கைது செய்யப்பட்ட 21 பேரும் விசாரணைகளின் பின்னர் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து நேற்றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிவான் ஜே. கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது அனைவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-ஒ-100)

## சுகாதாரத்...

கைவிட்டிருந்தது. எனினும், குறித்த விடயத்தில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை என்பதால், நாளை முதல் தொழிற்சங்கப் போராட்டத்தை மீண்டும் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளனர். (அ-ஒ-இ)

## ரயில்...

நோக்கிச் சென்ற ரயில் தேக்கவத்தையில் பயணித்துக்கொண்டிருந்தபோது 67 வயதான தேக்கவத்தையைச் சேர்ந்த ஒருவரை மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த அவர் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இருப்பினும் அவர் உயிரிழந்துள்ளார். (அ-ஒ-110)


## மரண அறிவித்தல்

மலர்வு 06 . 05 . 1948



உதிர்வு 17 . 03 . 2024

**தம்பு புலேந்திரராசா**

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு, 7ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு புலேந்திரராசா அவர்கள் நேற்று (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - சிவபாக்கியம் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - மகாலட்சமி தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற காந்திமதியின் அன்புக் கணவரும், பாலசிறிதரன் (சிறி - கிரிஷாந் ஹாட்வெயர்), ஜெயந்திரன், ஸ்ரீபன் (லண்டன்), காலஞ்சென்ற சக்திகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், ஜெயமலர், சிவகுமார், இந்திரகுமார், சந்திரகுமார், தவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சத்தியவாணி, யோகமலர், சிவகௌரி, விஜயந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கருணாநிதி, கோமதி, செல்வநிதி, பூமதி, காலஞ்சென்ற விசாகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், துஷாரா, பிரஷாந், பிருஷா, கிரிஷாந், லக்ஷிகா, மதுஷன், விதுஷா, டக்ஷிகா, திசிகா, விதுஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2024) திங்கட்கிழமை ந.ப 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

077 650 8963

(CS 282361) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைமையில் ஹெரோய்ன்;

# இளைஞனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்ட 23 வயதுடைய இளைஞர் ஒருவரை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சங்கானைப் பகுதியில் 2 கிராம் மற்றும் 100 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த இளைஞர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை அன்றையதினம் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது எதிர்வரும் ஏழு நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கு மாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)

**வேலையாள் தேவை**

கடையில் Delivery வேலைக்கு 20-30 வயதிற்குட்பட்ட ஆண் வேலையாள் தேவை.

(யாழ்.மாநகரசபைக்குட்பட்டவர் விரும்பத்தக்கது)

தொடர்பு: 074 029 2338

(CS 28239) S-1

## மரண அறிவித்தல்



**செல்லமுத்து தர்மலிங்கம்**

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லமுத்து தர்மலிங்கம் அவர்கள் நேற்று (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து - எள்ளுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பழனி - இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற ஈஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புச் சகோதரனும், தயாநிதி (முன்னாள் ஆசிரியர் - சிவபூமி பாடசாலை), புனிதா, கீத்தா (ஆசிரியர் - யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோகுலகிருஷ்ணன், ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திகழ்நிலவன், பிரணவன், ஹரிஹரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2024) திங்கட்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

316, கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்
077 994 4480
077 404 4682
077 994 4481

(CS 28234) S-1

**வேலையாட்கள் தேவை**

மேசன், தச்சன், வெல்டர் மற்றும் உதவியாட்கள் தேவை.

தொடர்பு: 077 5533 601
071 6933 601

**காணி தேவை**

யாழ். மாவட்டத்தில் தோட்டம் செய்யக்கூடிய காணி குத்தகைக்குத்தேவை.

077 013 3669
077 657 3072

(CS 28214) N-1

**வீடு வளவு நெற்காணி விற்பனைக்கு**

பறாளாய் வீதியில் 6 பரப்பு விஸ்தீரணமுள்ள 3 அறைகள் உடைய வீடும், தனிக் கிணறும், பறாளாய் வயல் வெளியில் 6 பரப்பு நெற் காணியும் விற்பனைக்கு உண்டு.

077 744 8080, 077 227 1327

(CS 54405) V-1

**சொகுசு வீடு விற்பனைக்கு**



சில்லாலை பிரதான வீதியில் தளபாடங்களுடன் சொகுசு வீடு (3 1/2 பரப்பு) விற்பனைக்குண்டு.

Contacts Number: 074 002 2219
Mithiran Thirukeswaran

(cs.54395) (N-1)

# மரண அறிவித்தல்



## லோகேஸ்வரி செல்லத்தம்பி

யாழ். நாரந்தனையை பிறப்பிடமாகவும் நாவலடி ஒழுங்கை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட லோகேஸ்வரி செல்லத்தம்பி நேற்று (17-03-2024) ஞாயிற்றுக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்தம்பியின் அன்பு மனைவியும், தனலட்சுமி (ஓய்வு நிலை தேசிய கல்விநிறுவக யாழ். பிராந்திய இணைப்பாளர்), ஜெயலட்சுமி (கனடா), காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் நவலட்சுமி (ஓய்வுநிலை அதிபர்), சுவர்ணலதா (அவுஸ்ரேலியா), யோகராணி (அவுஸ்ரேலியா), செல்விகா (விடுதிப்பொறுப்பு தாதிய சகோதரி, யாழ். போதனா வைத்தியசாலை), செல்வரூபன் (பணிப்பாளர், ஹம்டன் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்) ஆகியோரின் அன்புத்தாயாரும், வில்வநாதன் (ஓய்வுநிலை அதிபர், தாதிய பயிற்சி கல்லூரி), ரகுமத் (கனடா), சந்திரகுமார் (ஓய்வு நிலை அதிபர்), அருட்செல்வன் (அவுஸ்ரேலியா), கலாநிதி பரமேஸ்வரன் (அவுஸ்ரேலியா), ஞானமதி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், எழினா (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி) - சுதாகர் (சிரேஷ்ட விரிவுரையாளர், கணணி விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), Dr.விபுலன்- Dr.மகிழினி, Dr.கவினா-கேதீஸ், காமிலா-சுனில், ரசிக்கா-மயூரன், நதிக்கா, சுஜன்-நீதினி, சுஜானி (இலங்கை வங்கி, யாழ். 2ம் கிளை) - நிருஷன் (உதவிக்கல்விப் பணிப்பாளர், வடமாகாண கல்வித்திணைக்களம்), கஜன், ஷகிலன்-வைகரி, சுபன், வானதி, Dr.கஜனன், Dr.பாலகி, கவினன், யாதவன், சுரபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரோஷன், கோபினா, பபிஷன், நிதிஷன், ஆதித்யன், ஆதவி, மீரா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சிவஜா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசரட்ணம், கோபாலபிள்ளை, தியாகராசா மற்றும் புஸ்பராணி, இந்திராணி ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கமலாதேவி, கனகசுந்தரம், தங்கம்மா நாகேசு மற்றும் லீலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19-03-2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் முற்பகல் 11.00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிபிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

மலர்வு 19.05.1930 — உதிர்வு 17.03.2024

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/28198) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.